**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No.63/2025**

PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | வனிதாமணி(PW2) | | |
| Father's Name | சந்திரசேகர் | தொழில் | |
| Village | வள்ளிபுரம் | | |
| Taluk | அவிநாசி | Age | 63 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of May 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு 100 நாள் வேலைக்கு செல்கிறேன். 13.11.2024 ம் காலை 6 மணி அளவில் நானும் என் சம்மந்தி லோகநாதனும் வாக்கிங் செல்லும் போது பெருமாநல்லூரில் இருந்து குன்னத்தூர் செல்லும் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நடந்த சென்று கொண்டிருந்த சமயம் என் சம்பந்தி எனக்கு முன்பாக 20 அடி தூரத்தில் நடந்து சென்று கொண்டிருந்தார் நான் அவருக்கு பின்னால் நடந்து சென்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்து என் சம்மந்தியின் பின்னால் மோதி விபத்து ஏற்பட்டது நான் உடனடியாக ஓடிப்போய் சென்று பார்த்தேன். என் சம்மந்திக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு கையிலும் காயம் ஏற்பட்டு அவர் ரத்த வெள்ளத்தில் இருந்தார். நான் உடனடியாக சம்பவ இடத்திலிருந்து என் மருமகனுக்கு தொலைபேசி மூலமாக தகவல் சொன்னேன். பின்பு சம்பவ இடத்திலிருந்து என் சம்பந்தி லோகநாதனை 108 தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சரண் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். சம்பவ இடத்திற்கு என் மகளும் மருமகனும் வந்துவிட்டார்கள். போலீசார் என்னை கோவை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் தட்டான்குட்டை பசுமை நகரில் வசித்து வருகிறேன். விபத்து பற்றிய தகவல் எனக்கு யார் சொல்லி தெரியும் என்றால் நான் தான் நேரில் பார்த்தேன். நாங்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிக்குள் வாக்கிங் செல்லலாம் என்றால் செல்லலாம் ஆனால்

நாங்கள் அங்கு வாக்கிங் செல்வதில்லை ரோட்டில் தான் செல்கிறோம். சம்பவ தினத்தன்று மழை பெய்தது என்றால் சரிதான். என் சம்பந்தி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றார். எனக்கும் என் சம்பந்திக்கும் எவ்வளவு அடி தூரம் இருக்கும் என்றால் 20 அடி தூரம் இருக்கும். என் சம்பந்தி ரோட்டில் எந்த புரம் நடந்து சென்றார் என்றால் இடது புறம் நடந்து சென்றார். எதிரி எந்த திசை நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்தார் என்றால் தெற்கிலிருந்து வடக்கு திசை நோக்கி சென்றார். இருசக்கர வாகனத்தின் பதிவு எண் மற்றும் அதன் பெயர் எனக்கு தெரியாது. என் மருமகன் சம்பவ தினத்தன்று எந்த ஊரில் இருந்தார் என்றால் அதே ஊரில் தான் இருந்தார். நான் போன் செய்த உடன் சம்பவ இடம் வந்துவிட்டார். விபத்தில் எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. போலீசார் விசாரணையின் போது இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்ததை தான் சொல்லி இருந்தேன். மழை பெய்து கொண்டிருந்ததால் நானும் என் சம்பந்தியும் சம்பவ தினத்தன்று வாக்கிங் செல்லவில்லை என்றால் சரியல்ல. என் சம்மந்தி என்பதற்க்காக பார்க்காத சம்பவத்தை பார்த்தாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்திற்கும் வீடு உள்ள பகுதிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அரைக்கிலோமீட்டர் தூரம் இருக்கும். சம்பவ இடத்தில் நான் இல்லை என்றும் என் சம்மந்தி ரோட்டைக் கடக்கும்போது தான் சம்பவம் நடந்தது என்றால் இல்லை.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |